★ இனவெறியர் கொடூரங்கள்; வீரம், தீரம் மிகுந்த புலிகளின் நிகரிலாச் சரித்திரச் சாதனைகள்

# தமிழீழப் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சி நேற்றுமுதல் ஆரம்பம்!

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப் பட்ட காலம் தொட்டு சிங்கள வெறியர்களால் தமிழினம் பட்டுவரும் கொடுமைகளையும் இதுவரை வீரமரணமடைந்த மூவாயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களின் புகைப்படங்கள் அடங்கிய போராட்டக் கண்காட்சி மாவீரர் தினமான இரண்டாம் நாளான நேற்று கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் முற்பகல் 10.30 மணிக்கு யாழ் மாவட்டத்தளபதி செந்தாளனால் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது

கோப்பாய்ச்சந்தியிலிருந்து வாத்திய இசையுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் அணிவகுப்பு ஆரம்பமாகி கோப்பாய்கிறிஸ்தவக் கல்லூரியை வந்தடைந்தது. அணிவகுப்பிலும் போராட்டக் கண்காட்சியிலும் மூத்த உறுப்பினர் தேவர் கலை பண்பாட்டுக்கழகப்பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை யாழ் மாவட்ட அரசியல்நிர்வாகப் பொறுப்பாளர் ராஜன் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மூர்த்தி மருசலீனம் பா உட்பட புலிகள் பிரமுகர்

—04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 314 பிரசோற்பத்தி கார்த்திகை 07 (23 - 11 - 1991) சனி

23-11-1991

மீட்சியின்றித் தவிக்கும்

## மீனவக் குடும்பங்கள் நிலைமை குறித்து யாழ் அரச அதிபர் கொழும்பில் பேச்சு

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட கரையோரப்பகுதி மீனவர்களின் நிலைமைகுறித்து அமைச்சரவை ஆராயவிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பு சென்றுள்ள யாழ் அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர் இம் மீனவக்குடும்பங்களின் நிலைமைதொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடாத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குறிக்கப்பட்ட கடல் எல்லைக்குள் மீன்பிடிக்க அனுமதிப்பதா அல்லது இவர்களுக்கு இலவசமாக உலர் உணவு நிவாரணம் வழங்குவதா என்பதை அமைச்சரவை ஆராய்ந்து அதன் முடிவை இம் மாதம் 25ஆம் திகதி தெரிவிக்கும் எனவும் அச் செய்திகள் தெரிவித்தன, 25

● நீண்ட நாகள்ளின்பின், நேற்றுக்காலை

# கச்சாய் துறைமுகப்பகுதியில் பொம்மர்கள் குண்டு வீச்சு!

## ஐவர் காயம், படகுகள் சேதம், வீடுகள் தரைமட்டம்

நேற்றுக்காலை 6 மணியளவில் தென்மராட்சிப் பகுதியை வேரிரைச்சலுடன் வட்டமிட்ட மூன்று குண்டு வீச்சு விமானங்களும், ஒரு அவ்ரோ விமானமும் கச்சாய் துறைமுகப்பகுதியில் திடீர்த்தாக்குதலை நடாத்தின இதனால் ஐவர் காயமடைந்தனர். ஆறுவீடுகள் தரைமட்டமாகின கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த பத்து மீன்பிடிப்படகுகள் பலத்த சேதமடைந்தன.

### பல இடங்களுக்கும் அதிர்வு

பத்துக்கு மேற்பட்ட குண்டுகள் நேற்று இங்கு வீசப்பட்டதால், குடாநாட்டின் பல இடங்களிலும் இதன் அதிர்வைக்கேட்க முடிந்தது.

ஐந்து குண்டுகள் வீடுகளுக்குள் வீழ்ந்து வெடித்ததால் ஆறு வீடுகள் தரைமட்டமானதுடன் மேலும் சில வீடுக

—04 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

வவுனியா மாவட்டத்தில் இம்மாதம் 11ஆம் திகதி அன்று நடைபெற்ற நேரடி மோதலில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கப்டன் பிரபா செ. செல்வகுமார்- முல்லைத்தீவு) நேற்று வீரச்சாவு எய்தினார்.

## தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு

யாழ்ப்பாணம், நல்லூர் கோப்பாய், தீவகம் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த தமிழீழ மீட்புநிதி கடன் பத்திரதாரர்களில் தேர்ந்தெடுக்கப்பட்

—04 ஆம் பக்கம் பார்க்க

பிரதமர் ராவ், உயரதிகாரிகளுடனான சந்திப்பின் பின்

# அமைச்சர்தொண்டாநேற்றிரவு கொழும்பு திரும்பினார்!

இந்தியாவுக்கு நான்கு நாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்த அமைச்சர் திரு. எஸ் தொண்டமான் நேற்றிரவு கொழும்பு திரும்பினார்.

புதுடில்லியில் இவர் தங்கியிருந்த சமயம் இந்தியப் பிரதமர் திரு. பி வி. நரசிம்மராவ் மற்றும் வெளியுறவு அமைச்சு உயரதிகாரிகளுடன் ... தியச்செய்திகள் தெரிவித்தன

கொழும்புதிரும்பிய அமைச்சர் திரு. தொண்டமான் தாம் இந்தியத் தலைவர்களுடன் நடாத்திய பேச்சு வார்த்தை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## புதிய ஐ. நா செயலராக எகிப்தியர் தெரிவு

ஐ. நா. சபையின் புதிய தலைமைச் செயலராக எகிப்தின் அணைப் பிரதமரான ... இயுள்ளார்.

கிறிஸ்தவரான இவர் முன் ...

★ தமிழின இருளகற்ற உயிர்நீத்த மாவீரர்

# நெஞ்சம் நிறைந்த நினைவாக

பிரதமர் திரு. பி. வி. நரசிம்ம ராவ் மற்றும் வெளியுறவு அமைச்சு உயரதிகாரிகளுடன் பேச்சு நடாத்தியதாக இந்

ஐ. நா. சபையின் புதிய தலைமைச் செயலராக எகிப்தின் துணைப் பிரதமரான பூட்டாஸ் காலி (69) தெரிவா

கியுள்ளார்.

கிறிஸ்தவரான இவர் முன்னாள் எகிப்து ஜனாதிபதி

...04 ஆம் பக்கம் பார்க்க

# நெஞ்சம் நிறைந்த நினைவாக இரவிலும் விடுதலை கீதங்கள்

தமிழினத்தைச் சூழ்ந்துள்ள இருளகற்ற தம் இரத்தத்தை உயிரை இம் மண்ணுக்கு உரமாக்கிய மாவீரர் எழுச்சி கூறும் விடுதலைக்கீதங்கள் குடா நாடெங்கும் மாலை மயங்கி இருள் கவியும் வேளையிலும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன; அர்த்தராத்திரி வேளையிலும் இளைஞர்கள் மாவீரர் வார எழுச்சி ஏற்பாடுகளில் விழி துஞ்சாது ஆர்வத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது

# படையினரின் ரோந்து அணிகள்மீது மட்டக்களப்பில் தொடர் தாக்குதல்

மட்டக்களப்பில் தொடர்ந்து படையினர் மீது புலிகள் தாக்குதல் நடாத்தி வருகின்றனர்

நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு பனிச்சங்கேணி, வாகரை மாங்கேணி முகாம்களிலிருந்து புறப்பட்ட படையினர் காடுகளினூடாக வந்த போது விடுதலைப் புலிகள் அவர்கள் மீது தாக்குதல்களை ஆரம்பித்தனர்

இதனால் படையினர் தொடர்ந்து முன்னேற முடியாது அவ்விடங்களிலேயே தங்கியுள்ளனர்.

படையினர் அங்கிருந்தவாறு ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர்

இதேபோன்றுமட்டு ஜுவாட்டன் முகாமிலிருந்து நம்பை குளம் முகாமிலிருந்து படை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வன்னிப் பகுதியிலும் சிறப்பான ஏற்பாடுகள்

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மற்றும் வன்னிப் பகுதி எங்கும் மாவீரர் வார முதல் நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

கிளிநொச்சி, பரந்தன் கண்டி வீதி யெங்கும் அலங்கரிக்கப்பட்டு இருந்தன.

பாடசாலைகள், அரச தனியார் அலுவலகங்களில் தமிழீழ தேசியக் கொடி ஏற்ற பட்டுக் கூட்டங்களும் நடைபெற்றன. (06)

## மன்னார் இந்து ஆலயத்தை இடமாற்ற நடவடிக்கை

மன்னார் நகரில் உள்ள ஸ்ரீ முருகன் இந்து ஆலயத்தை வேறு இடத்துக்கு மாற்ற மறைமுகமாக நடடிவக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆலயக் காணியை சுவிகரிக்கவும் முயற்சிகள் எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மருத்துவ வசதியின்றி வயோதிபர் மரணம்

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தில் உறவினரால் கைவிடப்பட்ட சுகயீனமான வயோதிபர் ஒருவர் உரிய சிகிச்சையின்மையால் கடந்த 6 ஆம் திகதி மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராமலிங்கம் கனகசுந்தரம் (80) என்ற வயோதிபரை உறவினர் கைவிட்டு வந்ததாகவும் இராணுவம் அப்பகுதி

—04 ஆம் பக்கம் பார்க்க

## முல்லை ஊரடங்கு

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக கூட்டுப்படை தலைமையகம் அறிவித்தது ஊரடங்கிற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

கங்குல் அகன்றொரு காலை பிறந்திட
பொங்கி யெழுந்துமே போர்க்கோலம் பூண்டவர்
வெங்களம் ஆடியே வீழ்ந்தனர் மண்ணில்
விழுதுகளாகியே உறுதியைத் தந்தனர்.

**மாவீரர் வாரம்**

**இன்று எழுச்சி பொங்கும் மூன்றாவது நாள்**

★ அரசு தற்பொழுது ஆராய்கிறது

# 1980 வேலைநிறுத்தத்தில் பங்குபற்றாதோருக்கு

# மூன்று மேலதிக சம்பள அதிகரிப்புக்கள்!

கடந்த 1980 யூலை பொது வேலை நிறுத்ததில் பங்குபற்றாத அரச ஊழியர்களுக்கு மூன்று மேலதிக சம்பள அதிகரிப்புக்களை வழங்குவது பற்றி அரசாங்கம் தற்பொழுது ஆராய்ந்து வருகின்றது

நிதி, பொதுநிர்வாக அமைச்சுக்களின் செயலாளர்களை இது குறித்து ஆராய்ந்து இரண்டு கிழமைக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அரசு பணித்துள்ளது.

இதேவேளை வாழ்க்கைப் புள்ளிக்குத் தக்கவாறு மீண்டும் வாழ்க்கைச் செலவுப்படியை அரச ஊழியர்க்கு வழங்குவது பற்றியும் ஆராயப்பட்டு வருவதாகவும் மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

## கனிஷ்ட தொழில்நுட்ப நெறி மதிப்பீடுபற்றி கலந்துரையாடல்

1991 ஆம் ஆண்டு கனிஷ்ட தொழில் நுட்பத் தராதரப் பத்திரப் பாடநெறி தொடர்பான மதிப்பீட்டு நடைமுறைகள் பற்றிய கலந்துரையாடல்கள் கோட்ட ரீதியாக எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளன

யாழ் வேலணை கோட்டங்களுக்கு நல்லூர் ஸ்தான சீ. சீ த க. பாடசாலையிலும், சாவகச்சேரி கோட்டத்திற்கு டிறிபேர்க் கல்லூரியிலும், பருத்தித்துறை கோட்டத்திற்கு வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும், மருதனாமடம் கோட்டத்திற்கு இராமநாதன் கல்லூரியிலும், பண்டத்தரிப்புக் கோட்டத்திற்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் கருத்தரங்கு நடைபெறும் என யாழ் உதவிக் கல்விப்பணிப்பாளர் (தொழில் நுட்பம்) ச. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

## ஈழ அகதிகளைப் பலவந்தமாக அனுப்பக்கூடாதென்கிறார் சுவாமி

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகளைப் பலவந்தமாகத் திருப்பி அனுப்பக்கூடாதெனச் சமாசவாதி ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி கேட்டுள்ளார்.

நாடு திரும்ப விரும்பும் அகதிகளை மட்டுமே இலங்கைக்குத் திருப்பி அனுப்பவேண்டும். தமிழகத்தில் தொடர்ந்து தங்கியிருக்க விரும்புவோருக்கு அதற்கான அனுமதியும், உதவியும் வழங்க படவேண்டுமெனவும் சுப்பிரமணியசுவாமி மத்திய அரசைக் கோரியுள்ளார்.

## கூட்டுறவாளர்களின் மாவீரர் நிகழ்ச்சி

யாழ் மாவட்டக் கூட்டுறவாளர்கள் நடாத்தும் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்ச்சித் தொடரில் திவகக் கோட்டப் பிரிவின் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தீவகப்பொறுப்பாளர் காண்டீபன் தேசியக் கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்துவைப்பார்.

## கொழும்பு மாநகர அபிவிருத்திக்கு 130 கோடி ரூபா நிதி !

கொழும்பு மாநகர அபிவிருத்திக்கு 130 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரசபையின் 1992-ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திலேயே மாநகர அபிவிருத்திக்கு இவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி வெளிநாடுகளிடமிருந்து பெறப்பட்டுள்ளது

## வவுனியாவில். .

பதினெட்டு அமைச்சரவை உறுப்பினர்கள் இன்று சனிக்கிழமை வவுனியாவுக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## உயர்தரப்பரீட்சை பெறுபேறுகள் கொழும்பில் நேற்று வெளியாகின!

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப்பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று கொழும்பில் வெளியிடப்பட்டன.

பிற மாவட்டங்களுக்கான பெறுபேறுகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பரீட்சைக்கு ஒரு லட்சத்து 57 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

## 28 ஆம் திகதி மகாநாடு

சர்வகட்சி மகாநாடு இம்மாதம் 28 ஆம் திகதி மாலை 5 மணிக்கு மீண்டும் ஜனாதிபதி செயலகத்தில் கூடவுள்ளது.

இரண்டாவது சபையை ஆரம்பிப்பதுபற்றி ஒத்தி வைக்கப்பட்ட பேச்சுக்கள் அங்கு மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

இது தொடர்பான பேச்சுக்கள் இம்மாதம் 29 ஆம் திகதியும் டிசம்பர் 3 ஆம் 5 ஆம் திகதிகளிலும் தொடருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாவீரர் வாரம்

**போர்க்காலச் சிந்தனை : 3**

### தாய்க்குல மறப்பண்பு

"தாயிலாப் பேரன் தாய்மண் மீட்பிற்கே
போயினான்; எனக்குப் பூரிப்பு என்றவன்
இனிய பண்டம் செய்து எடுத்துமே
இருட்டும் பாதையில் ஊன்றுகோலுடனே
பாட்டியும் சென்று பார்த்தனன் அவனை"

தனியொரு பேரன், தாயில்லாப் பிள்ளை, மண் மீட்பிற்குப் போய் விட்டான் என்று பூரிப்படைந்தாள். இனிய பண்டம் செய்து கொண்டு அவள் ஊன்றுகோலுடன் இருட்டும் பாதையினூடாகச் சென்று அவனை பார்த்து அளவளாவினாள். நேற்றுவரை பாட்டியின் மடியில் கதை கேட்டவன்; அப்போது பாட்டிக்கு ஒரு வரலாறு சொல்லியிருப்பான் அவளின் வளைந்த முதுகு நிமிர்ந்திருக்கும். இம்மண்ணையும், மக்களையும் காட்டிப் புதுக்கதை சொல்லியிருப்பான். வெற்றிலை உரலோடு விளையாடியவன் இன்று களத்தில் எதிரியோடு, கையில் ஏ. கே யோடு விளையாடுவதைக் கேட்டுப் புதுத் தென்பு பெற்றிருப்பாள் இந்தப் பேரன் தண்ணீர் ஊற்றிய தென்னையும், செந்நீர் ஊற்றிய தேசமும் நாளை நிச்சயம் வளர்ந்து நிமிரும்.

இதைப்போல அன்று தமிழ் மண்ணிலே ஒரு காட்சி.

"இடைப்படை யழுவத்துச் சிதைந்து வேறாகிய
சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி
வாடுமுலை யூறிச் சுரந்தன;
ஓடாப் பூட்கை விடலைத் தாய்க்கே;"

புறம் - 295; 5 - 8

போர்க்களத்திலே புறங்காட்டி ஓடாத மேற்கோளையுடைய வீரனின் தாய், தன் மகனின் மாண்பைக் கண்டபோது அவளுடைய வாடிய முலைகள் பால் ஊறிச் சுரந்தன என்பது பாடற்கருத்து. இத்தகைய மறப்பண்பு படைத்த தமிழ்க் குலப் பெண்களும் வீரஞ் செறிந்த குணத்துடன் விளங்கினர் என்பதற்கு இவை ஓர் சான்றாகும்.

\- முருகனடியான்

## மாவீரர் நினைவுக் கூட்டங்கள்

தமிழீழ மாவீரர் வார கூட்டங்கள் இன்று நடைபெறவுள்ள இடங்களின் விவரம் வருமாறு-

வலிகாமம்:- நவற்கிரி குட்டிபாலர் பாடசாலை, பன்னாலை, வட்டு. திருஞானசம்பந்தர்.

தென்மராட்சி:- வரணி மகாவித்தியாலயம், புலோப்பளை கல்வி வளர்ச்சிக்கழகம்.

வடமராட்சி:- கம்பூது அ. த. க. பாடசாலை, நாகர்கோவில் நாகேஸ்வரா வித்தியாலயம்.

தீவகம்:- யாழ் ஸ்ரீபார்வதி வித்தியாலயம்.

நிகழ்ச்சிகள் இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும். தெரிவு செய்யப்பட்ட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கொடுப்பனவு

யாழ் மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் அண்மையில்

★ 'மீன்பாடும் மட்டக்களப்பு' - II

# 'ஈழத்தமிழ்யுவதிகளுக்கு இவ்வளவு ஆத்மபலம் இன்று எப்படி வந்தது?' - வியக்கிறார் பி. பி. ஸி - ஆனந்தி

'ஈழத்தமிழ் யுவதிகளுக்கு இவ்வளவு ஆத்மபலம் எப்படி வந்தது என்பது எனக்கு வியப்பாகவேயுள்ளது'

இப்படி பி பி. ஸி. ஆனந்தி தனது மட்டக்களப்பு விஜயம் பற்றிய வர்ணனையில் தெரிவித்தார்.

'மீன்பாடும் மட்டக்களப்பு' என்ற தலைப்பில் கடந்த புதன் கிழமை ஒலிபரப்பப்பட்ட இரண்டாவது இறுதி நிகழ்ச்சியில் தான்நேரில் கண்டவற்றையும், கேட்டறிந்தவற்றையும் இப்படி வர்ணிக்கிறார் ஆனந்தி -

### ஊதியம் இல்லா கடமை இது

மட்டக்களப்பில் இளம் தமிழ்ப் பெண்கள் வெறியுடன் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ளதை நான் நேரில் கண்டேன். இதற்காக ஊதியத்தை எதிர்பார்க்கவில்லை - இது எமது கடமை என்கிறார்கள்.

### வாழ்க்கை நியதி இதுதான்

மட்டக்களப்பில் வன்முறைக்கு மத்தியில் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. இது தான் எமது வாழ்க்கை நியதி

...ளுக்கு போதிய போஷாக்கு இல்லை. சிறுவர்களுக்கு படிப்பென்றால் என்னவென்று அங்கு தெரியாது.

### எங்கு போனாலும் அங்கு பிரச்சினை

காடுகளுக்குப் போனால் காட்டிக் பிரச்சினை; ஊருக்குப் போனால் ஊரிலும் பிரச்சினை இதுதான் மட்டக்களப்பு மக்களின் வாழ்க்கை.

### விதவைகளே மிஞ்சியுள்ளனர்

படையினரின் நடவடிக்கைகளினால் பல ஆண்கள் கொல்லப்பட்டுவிட்டனர். இதனால்

### மருந்துப்புட்டியும் பறி போனது

நான் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு திரும்பும்போது மீண்டும் அதே சோதனைகள்-கேள்விகள். எனது மருந்துப் புட்டியும் இச்சோதனையின் போது இராணுவத்தினால் பறிக்கப்பட்டது. நான் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை.

### என் மனதில் ஆழமான காயங்கள்

அந்த அவலங்கள், அவர்களின் அனுபவங்கள் என் மனத்தில் ஆழமான காயங்க

[illegible]
அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படி வர்ணிக்கிறார்

## பேசாலை திறந்தவெளி முகாமில் 1240 இடம் பெயர்ந்தோர்!

பேசாலை திறந்தவெளி நிலைய அகதிகள் முகாமில் தற்போது 1240 உறுப்பினர்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது இவர்கள் 375 குடும்பங்களைசேர்ந்தவர்கள்.

கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி செட்டிக்குளத்தைச் சேர்ந்த இவர்களுக்கு மாதாமாதம் நிவாரணம் வழங்கப்பட்டுவருகிறது.

இந்த நிலையத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்படுகிறது. குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்ப இது வழங்கப்படுகிறது. அகதிகள் தாமே சமைத்து உண்கிறார்கள்.

இந்த உலர் உணவு நிவாரணத்தை சுயமாக இயங்கும் சர்வோதயம், சிறுவர் பராமரி புநிதியம், செஞ்சிலுவைச் சங்கம் என்பன இடையிடையே வழங்குகின்றன. குழந்தைகளுக்கான பாகமா, மருந்துவகை, உடுப்புவகையும் இவற்றுள் அடங்குகின்றன.

17

## கடலில் மிதந்துவந்த அதிர்ஷ்டம் முந்தல் மீனவர்கள் லட்சாதிபதிகளாகினர்

களுத்துறை - முந்தல் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களில் பலர் திடீர் லட்சாதிபதிகளாகும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுள்ளதாக அறிவிககப்படுகின்றது.

கடலில் மிதந்து வந்த ஒரு பொருளே இந்த மீனவர்களுக்கு நம்பமுடியாத இந்தப் பேரதிர்ஷ்டத்தை வழங்கி அவர்களை லட்சாதி பதிகளாக்கியுள்ளது.

முறைக்கு மத்தியில் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. இது தான் எமது வாழ்க்கை நியதி என்கிறார்கள் அப்பகுதி மக்கள்.

### வாள் வெட்டுக்கு பலர் பலி

மட்டக்களப்பில் இராணுவ நடவடிக்கைகளின் போது ஊர் ஊராக வந்த இராணுவத்தினர் பலரை வாளால் வெட்டிக் கொன்றதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

### எட்டு மாதம் காட்டு வாழ்க்கை

இதனால் அவர்கள் காடுகளுக்கு ஓடினார்கள். சுமார் எட்டு மாதம் (கடந்த பெப்ரவரி வரை) காடுகளிலேயே பெரும்பாலானோர் வாழ்ந்தார்கள்.

### பிரசவங்களும் அங்கேயே தான்

காடுகளில் மரங்களின் கீழும் மேட்டு நிலங்களிலும் பிரசவங்கள் பல நடந்தன. இதனால் பிறந்த குழந்தைகள் பல இறந்தன.

### சிறுவர்களுக்கு இது தெரியாது

அங்குள்ள பல குழந்தைக

படையினரின் நடவடிக்கைகளினால் பல ஆண்கள் கொல்லப்பட்டுவிட்டனர். இதனால் விதவைகள் தான் அங்கு அதிகளவிலுள்ளனர்.

அந்த அவலங்கள், அவர்களின் அனுபவங்கள் என் மனத்தில் ஆழமான காயங்களாக இன்னமும் வலித்துக் கொண்டேயிருக்கிறது.

## ஐம்பது வயதுக்கு உட்பட்ட எழுத்தறிவற்றோர் விவரம் சேகரிப்பு

யாழ் மாவட்டத்தில் 50 வயதுக்குட்பட்ட எழுத்தறிவற்றோர் பற்றிய விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் கிராம சேவை அலுவலர்கள் மாகாண கல்வி விளையாட்டமைச்சின் சுற்று நிருபத்துக்கமைய இவ் விவரங்களை சேகரித்துவருகின்றனர்.

## இரு பிரிவுகளிலும் வெற்றி

சென்ஜோன்ஸ கல்லூரிக்கும், யாழ் மத்திய கல்லூரிக்கும், இடையில், சென்ஜோன்ஸ கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற உதைப் பந்தாட்டப் போட்டியில் 'ஏ' 'சி' பிரிவு ஆட்டங்களில் முறையே 3:2, 1:0 என்ற கோல்கள் கணக்கில் சென்ஜோன்ஸ் கல்லூரி அணிகளும் வெற்றி பெற்றன (16)

## கொம்படிப் பாதைப் பயணிகள் இருவர் நீரில் மூழ்கி மரணம்

தேங்காய் மூடையை தலையில் சுமந்து கொண்டு கொம்படிப் பாதையினால் வந்த ஒருவர் கொம்படி வெள்ளத்தில் மூழ்கி மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொம்படிப் பாதையால் சென்ற மற்றொருவர் குளிரினால் வலி ஏற்பட்டு அவதைப்பட்டு நீரில் மூழ்கிப் ஸ்தலத்திலேயே பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ராணுவ ஹெலி வீழ்ந்து அரசியல்வாதிகள் உட்பட 17பேர் பலி!

சோவியத்தில் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று விழுந்து நொருங்கியதில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டோரில் இராணுவ அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் அடங்குவர் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

பனிமூட்டத்தில் பறந்து கொண்டிருக்கையில் இஹெலிகொப்டர் மலையில் மோதியது.

யாழ் மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சங்கத்தின் நிர்வாக குழுவினால் சங்க யாப்புக்களைதயாரிக்கப்பட்ட அந்தியகால கொடுப்பனவுத் திட்டத்தின் சட்ட ஒழுங்கு முறைகள் ஒரு திருத்தத்தோடு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

● தொடரும் அடைமழை, புயலினால்

# தமிழகத்தில் 833 குளங்கள் முற்றாக உடைப்பு
# 7548 வீதிகள் நீரில் மூழ்கின; 340 கோடி ரூபா சேதம்

கடந்த சில தினங்களாக பெய்த அடைமழையினாலும் புயலினாலும் தமிழகத்தில் 340 கோடிரூபா பெறுமதியான சொத்துக்கள் சேதமுற்றுள்ளதாக உத்தேச மதிப்பீடொன்று தெரிவிக்கின்றது.

அடைமழை வெள்ளத்தினால் தமிழகத்தில் 833 நீர்த்தேக்கங்கள் உடைப்பெடுத்துள்ளன, 7548 வீதிகள் நீரில் மூழ்கிச் சேதமுற்றுள்ளன. 414 பாலங்கள் சேதமுற்றுள்ளன. 92 ஆயிரம் குடிசைகள் சேதமுற்றுள்ளன ஒன்றரைலட்சம் ஹெக்டயர் பயிர் சேதமுற்றுள்ளது.

சேதங்களை பார்வையிடுவதற்கென மத்திய அரசுக் குழுவொன்று தமிழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டோர் 500 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 70 பேர் வரையில் வெள்ளத்திற்கு அகப்பட்டு பலியாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ மீட்புநிதி கடன் மீளல்

நல்லூர்

1991. ஆடி

யா/ந/ 13, 258, 291, 322, 455, 1343, 2357, 2601, 4261, 4657, 5553.

1991 .ஆவணி

யா/ ந/ 229, 243, 566, 939, 1617, 3475, 4075, 4525, 4528, 4955, 5976.

1991:புரட்டாதி

யா/ ந/69, 84, 387, 413, 524, 1859, 2736, 3442, 3957, 4823, 5940.

1991. ஐப்பசி

யா/ ந/ 240, 375, 742, 906, 2549, 3348, 4145, 4763, 4968, 5339.

1991 கார்த்திகை

யா/ ந/ 499, 713, 928, 1210, 2421, 12528, 3224, 4200, 5456, 5645.

யாழ்ப்பாணம்

1991 . ஆடி

யா/ யா/ 289, 310, 661, 833, 1082, 1204, 1558, 3491.

1991 ஆவணி .

யா/ யா/ 129, 135, 149, 782, 785, 786, 920, 2416, 3216.

1991 . புரட்டாதி

யா/ யா/ 72, 111, 141, 345, 429 918, 924, 1769, 3941, 4173.

1991. ஐப்பசி

யா/ யா/ 148, 221, 763, 897, 912, 945, 2949, 3154, 4656.

1991. கார்த்திகை

யா/ யா/ 83, 252, 348, 793, 879, 3032, 3773, 4014, 4474.

கோப்பாய்

1991. ஆடி

யா/ கோ/ 219, 245, 537, 556, 563, 954, 1952, 2235, 4908, 5342.

1991. ஆவணி

யா/ கோ/ 209, 254, 310, 547, 902, 2193, 2736, 3329, 3346.

1991. புரட்டாதி

யா/ கோ/ 305, 420, 512, 1671, 1931, 4130, 4247, 5492, 6249.

1991. ஐப்பசி

யா/ கோ/ 135, 152, 504, 544, 1034, 1376, 1869, 2897, 3238.

1991. கார்த்திகை

யா/ கோ/ 83, 144, 164, 210, 508, 1626, 2755, 4362, 5332.

மானிப்பாய்

1991 . ஆடி

யா/ மா/ 13, 246, 478, 1820, 1962, 3402, 3715,

1991 . ஆவணி

யா/ மா/ 206, 220, 349, 547, 2082, 3106, 3622.

1991 . புரட்டாதி

யா/ மா/ 06, 24, 268, 793, 1071, 2105, 2436,

1991 . ஐப்பசி

யா/ மா/ 50, 71, 180, 211, 356, 649, 3046.

1991 . கார்த்திகை

யா/ மா/ 272, 885, 981, 1438, 2139, 3133, 3648,

உடுவில்

யா/ உ/ 68, 592, 1250, 1812, 2914.

ஆவணி

யா/ உ/ 43, 95, 630, 881, 1429.

புரட்டாதி

யா/ உ/ 136, 217, 379, 2814, 2853.

ஐப்பசி

யா/ உ/ 736, 931, 1578, 2361, 2459.

கார்த்திகை

யா/ உ/ 26, 159, 372, 686, 889.

—04 ஆம் பக்கம் பார்க்க

## 'புலிகளின் குரல்' ஓராண்டு நிறைவு போட்டியில் வெற்றிபெற்றோர்

'புலிகளின் குரல்' ஓராண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதை, விமர்சன, கவிதை, வானொலி நாடகப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

சிறுகதைப் போட்டி:-

1 ஆம் பரிசு- நடேசன் குகதாசன் (தலைப்பு - உறுதி), 2 ஆம் பரிசு- வல்வையூரான் (தலைப்பு - ஊனங்கள் உடைகிறான்), 3 ஆம் பரிசு - (1) ந. கிருஷ்ணசிங்கம் (தலைப்பு- புலியாட்டம்), (2) துரை சுப்பிரமணியம் (தலைப்பு - வேள்வி).

விமர்சனப் போட்டி:-

1 ஆம் பரிசு-(1) ந கிருஷ்ணசிங்கம், (2) ம. முரளீதரன், 2 ஆம் பரிசு-பு செந்திகுமரன்

கவிதைப் போட்டி:-

1 ஆம் பரிசு- வே இளைய குட்டி 'தலைப்பு - கரும்புலிகளின் நினைவுகுறிப்பும் கவிதை கூறும்), 2 ஆம் பரிசு-மா. புவனேந்திரராஜா (தலைப்பு - (1) தன்மானம் மிக்க தமிழ் முக் கனவு. (2) குனிந்த தமிழர் தலைகள் நிமிரும்), 3 ஆம் பரிசு- செ. குமாரசாமி (தலைப்பு -வாணி வந்தாள்).

வானொலி நாடகப்போட்டி

1 ஆம் பரிசு- (1) (தலைப்பு உறவுகள்) ந. கிருஷ்ணசிங்கம், தலைப்பு - உறவுகள் (2) க. சிவராசா (தலைப்பு - மாறட்டும் மனங்கள்), 2 ஆம் பரிசு வல்வையூரான் (தலைப்பு- இதுதான் முடிவு).

□ □

## 'மகோகனி' மரம் நடுகை

குடா நாட்டிலுள்ள சகல பிரதேச அலுவலகங்களிலும், ஒவ்வொரு சன சமூக நிலையங்களிலும் ஒவ்வொரு மகோகனி' மரம் நாட்டப்பட வேண்டும் என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (25)


## ஓம் ஸ்ரீ சாயிராம்

மனிதன் சமுதாயத்திற்குத் தான் கடன் பட்டிருப்பதை உணர வேண்டும். சமுதாயத்தின் மத்தியிலேயே பிறந்து, வளர்ந்து, சமுதாயத்தினால் எல்லா நலன்களும் பெற்றுக் கொள்ளும் மனிதனுக்கு சமுதாயத்திற்கு சேவை செய்யும் கடமை உள்ளது. இந்த உணர்வு இருந்தால்தான் நாடும் உலகும் நல்ல நிலையில் இயங்கும்.

— பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா

பகவானின் 66 வது பிறந்த நாளை முன்னிட்டு அமைதி நிலவ பொங்கும் மங்களம் அகிலமெங்கும் தங்கிடச் செய்யும்படி சிரம்தாழ்த்தி கரம் கூப்பி வேண்டுகிறோம்.

— சாயி அடியான்

11047


தமிழீழ மாவீரர் வார விழா 21.11.91 வியாழக்கிழமை சரியாக 8 மணிக்குத் தமிழீழமெங்கணும் தமிழர் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டு ஆரம்பமானது. தேசியக் கொடியை வணங்குவது, கௌரவிப்பது, நாட்டை வணங்குவது, மதிப்பது போலாகும். தேசியக் கொடி நாட்டை எவ்வாறு பிரதிபலிக்கிறது; ஆகையினால் அதற்கு எவ்வாறான முக்கியத்துவம், மரியாதை கொடுக்கப்பட வேண்டும் என்பனவற்றை விவரிக்கிறது இக்கட்டுரை

## தமிழீழ தேசியக் கொடி

ஒரு நாட்டின் தேசிய இனங்கள், நாட்டு மக்களின் பண்புகள், ஆட்சி, இறைமை என்பவை உட்பட அந்த நாட்டைக் குறிக்கின்ற ஒட்டு மொத்தமான பொதுச் சின்னமாக தேசியக் கொடி விளங்குகிறது. ஒவ்வொரு நாட்டினது இயல்புகள், நிலைமைகள், எண்ணங்களின் வெளிப்பாடாக அவ்வவ் நாட்டு தேசியக் கொடிகளின் சின்னம், நிறம், அளவு என்பன வேறுபட்டிருக்கும். தேசியக்கொடியின் அளவு பெரும்பாலும் 3:2 என்ற அளவினதாகவே இருக்கின்றது. சில நாடுகளின் தேசியக்கொடிகள் 2:1 ' 1:1 என்ற அளவினைக் கொண்டதாகவும் இருக்கின்றது.

நாட்டைப் போற்றி வணங்குதற்கூடாக தேசியக்கொடிக்கு வணக்கம் செலுத்தப்படுகிறது. தேசியக் கொடியை வணங்குவது நாட்டை வணங்குவது போலாகும்.

நாட்டின் தலைவர் படை, ஆட்சி என்பவற்றைவிடவும் உயர்ந்ததாக தேசியக்கொடி மதிக்கப்படுகிறது. எனவேதான் ஒரு நாட்டின் எந்தவொரு சிறப்பு நிகழ்வுகளின் போதும் நாட்டின் தலைவர், படை, அரசுப்பணியாளர் அனைவரும் தேசியக்கொடி வணக்கம் செய்கின்றனர்.

தேசியக்கொடிக்கு வழங்கப்படும் மதிப்பு, சிறப்பு என்பன அந்த நாட்டைச் சென்றடைவது போல, தேசியக்கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு, புறக்கணிப்பு என்பனவும் அந்த நாட்டையே சென்றடையும். எனவே தான் தேசியக்கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு பெரும் குற்றமாகக் கருதப்பட்டு அக்குற்றத்துக்கு மிகுதியான ஒறுப்பு (தண்டனை) வழங்கப்படுகிறது.

தேசியக் கொடிக்கு செலுத்துகின்ற கொடி வணக்க நிகழ்வுக்கு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சீரான ஒழுங்குமுறை வரையறுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் படுகிறது. கொடியேற்றம், கொடிவணக்கம் என்பவற்றுக்கான ஒழுங்குமுறை நடைமுறை நாட்டுக்கு நாடு வேறுபட்ட முறையில் அமைந்திருக்கும். அந்த வரையறுக்கப்பட்ட ஒழுங்குமுறையைமீறுவதும் தேசியக்கொடிக்கு இழைக்கப்படுகின்ற இழிவாகவே கொள்ளப்படும்.

சிறப்பு நிகழ்வுகளுக்கான ஊர்வலங்களின் போது தேசியக் கொடியை ஏந்திச் செல்வதும், ஏந்தி நிற்பதும்கூட கொடிக்கு செலுத்துகின்ற மதிப்பு வணக்கமாகும். தேசியக்கொடியேற்றுபவர்களும், கொடிக்கம்பத்தை காப்பவர்களும் தேசியக்கொடி சிதையவோ கொடிக்கம்பம் சரியவோ இடமளிக்க மாட்டார்கள். கொடியேற்றுபவர்கள் தேசியக்கொடியேற்றும் நிகழ்வின் போது உயிர்போகிற நிலைவரினும் கொடியைக் கைவிடாத் தன்மையைக் கொண்டிருப்பர். தாம் ஏந்துகின்ற கொடி சரிந்தாலோ, கீழே விழுந்தாலோ அது தமது நாட்டுக்கு இழுக்காகும். தமது நாட்டின் ஆட்சி வீழ்ந்ததாகக் கொள்ளப்படும் என்ற உணர்வு அவர்களிடம் இருக்கும்.

நாட்டின் தலைவர்கள், சிறப்புக் குடிமக்கள் போன்றோரின் மறைவையொட்டி ஏற்படும் நாட்டின் துயர நிகழ்வுகளின்போது தேசியக் கொடி கொடிக் கம்பத்தின் உச்சிவரை ஏற்றப்பட்டு கொடிக் கம்பத்தின் நடுப்பகுதிவரை இறக்கிக் கட்டிப் பறக்க விடுவதன் மூலம் நாட்டின் துயரம் உணர்த்தப்படுகின்றது.

கொடிக் கம்பத்தின் நுனியிலே பறக்கின்றகொடி நடுக்கம்பம் வரை இறக்கப்பட்டு அரைக் கம்பத்தில் பறப்பதே நாட்டின் மிகுதுயரை உணர்த்துவதாயின் தேசியக் கொடி சிதைவுறுவதோ, இழிவுபடுத்தப்படுவதோ, கீழே வீழ்த்தப்படுவதோ, வீசப்படுவதோ, கால்களில் மிதிபடுவதோ எண்ணிக் கூடப் பார்க்க முடியாத நிலையாகும்.

...219, 245, 537, 556, 563, 954, 1952, 2235, 4908, 5342. 889.

—04 ஆம் பக்கம் பார்க்க

11047

சிதைவுறுவதோ, இழிவுபடுத்தப்படுவதோ, தீயே விழ்த்தப் படுவதோ, வீசப்படுவதோ, கால்களில் மிதிபடுவதோ எண்ணிக் கூடப் பார்க்க முடியாத நிலையாகும்.

## தமிழீழ தேசியக்கொடி

1977 ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொடியாக இருந்துவரும் புலிக்கொடியில் உள்ள எழுத்துக்கள் நீக்கப்பட்டு தமிழீழத்தின் தேசியக் கொடியாக 1990 ஆம் ஆண்டு மாவீரர் நாளிலிருந்து (27-11-1990) அறிவிக்கப்பட்டு அன்று முதல் தமிழீழத்தின் தேசியக் கொடியாக இருந்து வருகிறது.

எமது தேசியக் கொடியை மூன்று நிறங்கள் அலங்கரிக்கின்றன. மஞ்சள், சிவப்பு, கறுப்பு ஆகிய நிறங்கள் தமிழீழ மக்களுக்கு ஒரு தாயகம் உண்டு. அந்தத் தாயகம் அவர்களது சொத்துரிமை, தமிழீழ மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதால் அவர்களுக்குத் தன்னாட்சி (சுய நிர்ணய) உரிமை உண்டு இந்தத் தன்னாட்சி உரிமை அவர்களது அடிப்படை அரசியல் உரிமை. தமது தாயகத்தை மீட்டெடுத்துத், தன்னாட்சி உரிமையை நிலை நாட்டுவதற்குத் தமிழீழ மக்கள் மேற்கொண்டுள்ள தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின்பாற்பட்டது. மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கிறது.

தேசிய சுதந்திரம் பெற்றுத் தமிழீழத் தனியரசை அமைத்து விட்டாற் போல நாம் முழுமையாக விடுதலை பெற்றதாகக் கொள்ள முடியாது. தமிழீழச் சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும். வர்க்க சாதிய முரண்பாடுகள் அகற்றப்பட வேண்டும்- பெண் அடிமைத்தனம் நீக்கப்பட வேண்டும். இதற்கு சமுதாய அமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். சமத்துவமும், சமதர்மமும், சமூக நீதியும் நிலை நாட்டப்பட வேண்டும் இப்படியான புரட்சிகரமான சமுதாய மாற்றத்தை வேண்டி எமது அரசியல் இலட்சியத்தைச் சிவப்பு நிறம் குறியீடு செய்கிறது.

(வளரும்)

## யாழ்கூட்டுறவுச்சங்க மாவீரர் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களும், பணியாளர்களும் இணைந்து விரிவான அடிப்படையில் நடாத்தும் தமிழீழ மாவீரர்கள் வார நிகழ்ச்சிகள் 21 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இவ் வாரத்தை யொட்டி நிகழ்ச்சிகள் 27 ஆம் திகதி மாலை 5 மணி வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளது. (16)


## சிறு விளம்பரம்

### சேவை

சமையலுக்கு விறகாக, பயிருக்கு பசளையாக, கால் நடைக்கு உணவாக உதவும் இபில்.இபில் விதை பெற ரூபா.2/- பெறுமான அஞ்சல் முத்திரை அனுப்பவும். 'மிக்வைற்'

11038

யாழ் பட்டினத்தில், ஆஸ்பத்திரி வீதியில்

## முரசொலி விளம்பர கருமபீடம்

இலங்கை வர்த்தக வங்கியின் யாழ் கிளைக்கு அருகிலும் யாழ் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு முன்பாகவும், 484/1 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்த

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்றெட் கட்டிடத்தின் முதலாம் மாடியில்

முரசொலியில் பிரசுரித்தற்கான விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

சனி, ஞாயிறு தவிர்ந்த எல்லா நாட்களிலும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை விளம்பரங்களைக் கையளிக்கலாம்

பொது முகாமையாளர்
முரசொலி

A11046

★ யாழ் அரச அதிபருக்கு அனுமதி கிடைத்தது

# தீவக, பூநகரி, கரையோர அகதிகளுக்கு

# தொடர்ந்து இலவச நிவாரணம் கிடைக்கும்

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள பூநகரி, தீவகம், கரையோரப் பிரதேசங்கள் ஆகியவற்றில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு தொடர்ந்தும் இலவச உலர் உணவு வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்தும், ஸ்ரீ லங்கா அரசு அனுமதி அளித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கு இரண்டு வார காலத்துக்கே முதலில் இலவச உலர் உணவு நிவாரணமாக வழங்கப்பட்டது.

தமக்குத் தொடர்ந்தும் இலவச நிவாரணம் தரவேண்டும் எனக்கோரி கடந்தவாரம் யாழ் நகரில் இவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தி அரச அதிபருக்கு மகஜரும் கையளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவர்களின் தற்போதைய நிலைமைகள்பற்றி கொழும்பிலுள்ள யாழ் அரசாங்க அதிபர் அதிகாரிகளுடன் பேச்சு நடாத்தியதையடுத்து இந்த அனுமதிவழங்கப்பட்டுள்ளது. (25)

### மாணவ, மாணவியர் ஏமாற்றம்

## தபால் அறிமுக அட்டைகள் குறைவாகவே வந்துள்ளன

எதிர்வரும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்குரிய தபால் அறிமுக அட்டைகள் குறைவாகவே இம்முறை கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அறிமுக அட்டை இம்முறை வந்திருக்கலாம் என்றுஎண்ணி பல மாணவ மாணவிகள் சில தபாற்கந்தோர்களுக்கு நேற்று வந்ததையும் காண முடிந்தது.

அடுத்த முறைவரும் கப்பலிலும் இந்த அறிமுக அட்டைகள் அனுப்பப்படாவிட்டால் பல மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 06

### புனர்வாழ்வு அமைச்சு கூறுகிறது

## கப்பல்மூலம் உணவு இறக்குவது காலநிலையால் பாதிப்பாம்

யாழ்குடா நாட்டிற்கான உணவுத்தேவையை தனியே கப்பல்கள் மூலம் பூர்த்தி செய்ய முடியாது தரைவழியாகவும் கொண்டு வருவதன் மூலமே அதைபூர்த்தி செய்ய முடியும் என புனர்வாழ்வு அமைச்சு நேற்று தெரிவித்தது.

இதனால் ஆனையிறவூடாகவும் போக்குவரத்து ஆரம்பிக்க வழி செய்யப்பட்டுள்ளது எனவும், காலநிலை சரியில்லாததினால் பருத்தித்துறையில் உணவு இறக்கும் வேலைகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சு மேலும் தெரிவித்தது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் நடைபெறும் பேச்சுகள் முடிவடைந்ததும் காங்கேசன் துறைமுகத்திற்கு உணவு கப்பல்களை கொண்டு வருவது குறித்து முடிவு செய்யப்படும் என புனர்வாழ்வு அமைச்சு மேலும் தெரிவித்தது.

## மன்னாரில் தமிழரின் இடங்களில் முஸ்லிம்கள் குடியேற்றம்

மன்னார்த்தீவில் தமிழ் மக்கள் இடம் பெயர்ந்த இடங்களில் முஸ்லிம்கள் இராணுவத்தினரால் குடியிருத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் அகதிமுகாம்களில் தொடர்ந்து தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற முஸ்லிம்களை படையினர் இங்கு அழைத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இடம் பெயர்ந்தவர்களுக்கு குடிசைகள் அமைக்க அனுமதி

தீவுப்பகுதி மற்றும் குடா நாட்டின் கரையோரப் பகுதிகளில் இருந்துஇடம்பெயர்ந்து முகாம்கள் பாடசாலைகள் தெரிந்தவர் வீடுகளில் தங்கியிருப்போருக்கு நிலைமை சீராகும்வரை தற்காலிகமாக தங்குவதற்கு குடிசைகள் அமைக்கப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான 10 மில்லியன் ரூபாவைச் செலவிட அரசு அனுமதியளித்துள்ளதாக கொழும்பிலிருந்து அரச அதிபர் யாழ் செயலகத்துக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்படி சுமார் இரண்டாயிரத்துக்கு அதிகமான குடிசைகள் அமைக்கப்படவுள்ளன.

இவற்றுக்கு பொருத்தமான இடத்தை தெரிவு செய்வதில் செயலக அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (25)

## யுவதிகளுக்குக் குறுகிய கால விவசாயப் பயிற்சி

யாழ் மாவட்டம் திருநெல்வேலி அரசினர் விவசாயப் பண்ணையில் படித்து விட்டு வேலையற்றிருக்கும் யுவதிகளுக்கான குறுகியகால விவசாயப் பயிற்சி நெறி இம்மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாக விருப்பதாக யாழ் மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் கே குணரட்ணம் தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சி வகுப்பில் சேருவதற்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் விண்ணப்பிக்க தவறியவர்களும் தமது விண்ணப்பங்களுடன் காலை 9 மணிக்கு சமுகம் அளிக்கும் படியும் அவர் கேட்டுள்ளார்.

தெரிவு செய்யப்படும் யுவதிகளுக்கு ஒருமாதப் பயிற்சியும், அளிக்கப்படவுள்ளது. இவர்களுக்கு தங்குமிடவசதிகளும் செய்து கொடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. 06

## கனிட்ட தொழில்நுட்பப் பரீட்சை

ஆண்டு 9வகுப்பிலே கற்கும் எல்லா மாணவரும் தத்தமது பாடசாலை அதிபர்களை எதிர்வரும் திங்கட்கிழமை சந்தித்து விண்ணப்பப்படிவங்களில் கையொப்பமிடுதல் வேண்டும் என்றும் டிசெம்பர் மாதம் 18-ம் திகதி நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ளோரின் விண்ணப்பங்கள் அவசரமாக கொழும்புக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது ஆசிரியர், மாணவர், பெற்றோர் அதிபருக்கு வேண்டிய உதவிகளை விரைந்து வழங்க வேண்டுமென பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ சிவானந்தன் சம்பந்தப்பட்டோரைக் கேட்டுக் கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது

### தமிழீழப்...

...கள் கலந்துகொண்டனர்

இக்கண்காட்சியில் யாழ்ப்பாணத்தில் 1986ஆம் ஆண்டு விமானத்தாக்குதலால் பலியானவர்கள் இறந்த பொது மக்களின் படங்கள் 1977ஆம் 1979ஆம் 1983ஆம் ஆண்டுகளில் சிங்களக் காடையர்களால் தமிழர்கள் மீதுநடாத்திய வெறியாட்டம் யாழ்ப்பாணம் மன்னார் காரைநகர் திக்கம் போன்ற இடங்களில் இராணுவ வண்டிகள் புலிகளால் தகர்ப்பு கைதிகள் பரிமாற்றம் பேச்சுவார்த்தை இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து இந்திய உயரதிகாரிகள் யாழ் வருகை இந்தியப்படைமீதுபோர் தொடுத்த போது சங்கானையில் செயின் வண்டித்தாக்குதலால்(டாங்கி) அழிப்பு போன்ற புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

துரையப்பா கொலை கார்சேதம் மன்னார் முருங்கன் பொலிஸார் கொலை மன்னார் இராணுவச்சடலங்கள் போன்றனவும் புகைப்படத்தில் இடம்பெற்றுள்ளன

தமிழினத்தின் விடுதலையை ஆதரித்து தமிழ் நாட்டில்

### அமைச்சர்...

விவரங்களை ஜனாதிபதி பிரேமதாஸவுக்கும் ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் விளக்குவார் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

### மருத்துவ...

யில இருப்பதால் நோய்க்குரிய சிகிச்சை அளிக்கப்படாததால் இவர் மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது மரண அறிவித்தல் இராணுவ தலைமையகத்தால் தொண்டர் நிறுவனத்துக்கு தெரிவிக்கப்பட்டு உறவினருக்கு கிடைத்துள்ளது. 07

### புதிய...

அன்வர் சதாத்தின் ஆலோ

### தமிழீழ மீட்புநிதி...

தெல்லிப்பழை

1991 ஆடி

யா/தெ/ 19, 632, 652 920, 930, 990, 2127.

1991-ஆவணி

யா/தெ/ 35, 37, 274, 340, 811, 991, 2695,

1991-புரட்டாதி

யா/ தெ/92 132, 185, 254, 359, 508, 922.

1991-ஐப்பசி

யா/தெ/ 26, 74, 570, 594

## அராலியில் ஷெல்

நேற்று முன்தினமிரவு அராலி இறங்குதுறையில் இருந்து இராணுவத்தினர் ஏவிய ஷெல்கள் அராலி ஏறுதுறைப் பகுதியில் விழுந்து வெடித்தன.

அராலி ஏறுதுறைப் பகுதியில் உள்ள வெளிகளில் இந்தச் ஷெல் குண்டுகள் விழுந்து பாரிய சத்தத்துடன் வெடித்தன. 18

## நெடுந்தீவு தபால்கள்

நெடுந்தீவுத் தபாலகம் யாழ் பிரதம தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

யாழ் குடா நாட்டில் நெடுந்தீவில் இருந்து இடம் பெயர்ந்திருக்கும் மக்கள் தமக்குரிய தபால்களை இங்கு பெற்றுக் கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளனர். 06

## பட்ஜட் நிறைவேறியது

அரசின் மூன்றாவது வரவு வசலவுத்திட்டம் நேற்று சபையில் 52 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் விடுதலை முன்னணி ஐக்கிய சோசஷலிஸக் சி விடுதலைக் கூட்டணியில் சில உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

## திருடப்பட்ட சைக்கிள்கள்

யாழ்ப்பாணப் பகுதியில் திருடப்பட்ட ஐந்து சைக்கிள்கள் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டு சோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

உரிமையாளர்கள் அடையாளம் காண்பித்து இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ் இந்துவில் கண்காட்சி

யாழ் இந்துக்கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலில் ஓவியக் கண்காட்சி ஒன்று நடைபெறுகின்றது.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஓவியக் கண்காட்சியில் விசேடமாக தென் தமிழீழ மக்களின் அவல நிலைகளும் போராட்ட நிகழ்வுகளும் உணர்ச்சியூட்டும் வகையில் ஓவியங்களாக தீட்டப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இவற்றோடு தென் தமிழீழ மாவீரர்களின் புகைப்படங்கள், ஓவியப்படங்கள் என்

## [illegible] பொருள் சேகரிப்பு?

தில் இடம்பெற்றுள்ளன

தமிழினத்தின் விடுதலையை ஆதரித்து தமிழ் நாட்டில் 1983 ஆம் ஆண்டு தொடக்கம் நடாத்தப்பட்ட பேரணிகள் ஆர்ப்பாட்டங்கள் மண்டை ஓட்டு ஊர்வலம் பொதுக்கூட்டங்கள் ஆகியன அடங்கிய சுவரொட்டிகளும் பொருத்தப்பட்டுள்ளது.

தலைவர் பிரபாகரன் முன்னாள் தமிழக முதல்வர் எம். ஜி ஆரைச் சந்தித்த காட்சி தலைவர் மாத்தையா கிட்டு ஒன்றாக சந்திக்கும் காட்சி திலீபன் உண்ணாவிரதம் சுதுமலைக் கூட்டத்தில் தலைவர் உரையாற்றுவது ஆயுதங்களை ஒப்படைப்பது போன்ற காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

பயிற்சி முகாமில் புலிகள் பயிற்சிபெறுவது கானகத்தில் புலிகள முகாமிட்டிருப்பது போன்ற காட்சிகளும் அடங்கியுள்ளன.

27ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும் இக்கண்காட்சியை காலை9மணிமுதல் மாலை 5மணிவரை பொதுமக்கள் பார்வையிடலாம்.

(06-07)

## புதிய...

அன்வர் சதாத்தின் ஆலோசகரும் இஸ்ரேல்-எகிப்து காம் டேவிட் ஒப்பந்தத்தின் மூலகர்த்தாவும் ஆவார்.

ஐ நா செயலராக முதற் தடவையாக ஆபிரிக்க கண்டத்தவர் ஒருவர் தெரிவாகியுள்ளார் தற்போதைய ஐ; நா செயலர் ஸெ ரஸ்டிகுயிலர் இவ்வருட முடிவுடன் ஓய்வு பெறுகிறார்

## கச்சாய்...

ளும் சேதமடைந்தன,

வாரித்தம்பி ஐயாத்துரை (60) என்ற வயோதிபர் படுகாயமடைந்து யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## தெய்வாதீனமாக மீனவர்கள் உயிர்தப்பினர்

கச்சாய் துறைமுகப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமையானதால் மீனவர் கடலுக்கு செல்லவில்லை என்பதால் பல உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

07, 06

254, 359, 508, 922.

1991-ஐப்பசி

யா/தெ/ 26, 74, 570,594, 940, 1408, 2598, 4174

1991-கார்த்திகை

யா/தெ/88 239 681.741, 823, 1544, 1921, 2159.

(தொடர்ச்சி நாளை)

## தமிழீழ...

டவர்களுக்கு 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி மகா வித்தியாலயத்தில் கடன் மீளளிக்கப்படும்

## மன்னார்...

கடந்த மாதம் முதல் இங்கு வழிபாடுகள் நடைபெறக்கூடாது என இராணுவம் உத்தரவிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(06(

## படையினரின்...

யினர் மதுரங்கேணிக்கு முன்னேறிய போது விடுதலைப் புலிகளின் மற்றைய அணி கருவேப்பங்கேணியில் வைத்து படையினர் மீது அதிரடித்தாக்குதலை நடாத்தினர் இதன் போதுஇரு கண்ணிவெடிகளும் வெடித்தன இதனால் படையினர் தரப்பிக் பெருஞ்சேதம் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது

தெரிவிக்கப்படுகின்றது

06

# கொழும்பில் பொருள் சேகரிப்பு? செஞ்சிலுவைச்சங்கம் மறுப்பு

'வடக்கிலுள்ள பொது மக்களுக்கு பொருள்கள் அனுப்பவென சில தனியார் நிறுவனங்கள் கொழும்பில் நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றன என்றும் பொருள்கள் செஞ்சிலுவைச்சங்கம் மூலம் அனுப்பப்படும் எனவும் அந் நிறுவனங்கள் கூறிவருகின்றன இது குறித்து எமது கவனத்திற்கு சிலர் கொண்டுவந்துள்ளனர்

இவ்வாறு ஸ்ரீலங்காவிலுள்ள செஞ்சிலுவைச் சங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நிதி சேகரித்து பொருள்களை வடக்கிற்கு அனுப்பும் எந்த நடவடிக்கையிலும் ஸ்ரீ லங்காவிலுள்ள செஞ்சிலுவைச் சங்கமோ சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமோ ஈடுபடவில்லை என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

வடக்கிலுள்ளவர்களுக்கென அவர்களது உறவினர்கள் கொழும்பில் மேற்படி தனியார் நிறுவனங்களின் பொய்யான பிரசாரத்தினால்ஏமாற்றப்பட்டுள்ளதாகவும், பலர் நிதியுதவியும் செய்து ஏமாற்றமடைந்துள்ளனர் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

# குளத்தில் மூழ்கி மரணம்

குளத்திற்குள் குளிக்கச் சென்ற மூன்று இளைஞர்களில் 'டாலி' என்று அழைக்கப்படும் ராஜ்குமார் (21) என்ற இளைஞர் குளத்தில் உள்ள ஆம்பல் கொடிகளுக்குள் சிக்குண்டு மூச்சுத்திணறி மரணமானார்.

கடந்த (20-11-91) காலை 10 மணியளவில் அரியாலை நெடுங்குளத்தில் குளிக்கச் சென்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

பலியான இளைஞரின் சடலம் பின்னர் கண்டெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

18

இவற்றோடு தென் தமிழீழ மாவீரர்களின் புகைப்படங்கள், ஓவியபடங்கள் என்பனவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மின்சார விளக்குகளால் பகலிலும் இரவிலும் அலங்கரிக்கப்பட்டுள்ள இவ் ஓவியங்கள் காட்சியை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு செல்கின்றனர்.

04 06,21

## மாணவர் ஊர்வலம்

களனிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் தமது வாய்களைத் துணிகளால் கட்டி தம் ஆட்சேபம் ஒன்றினை அமைதியாக நடத்தினர்

இவர்களில் இருவர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்

மாணவர்களுக்கு வெளிவாரிப்பட்டமளிப்பதற்கு ஆட்சேபமே இதுவெனத் தெரிவிக்கப்படுகின்றது

இவர்களை நிருபர்கள் பேட்டிகண்டபோது தம் குறைபாடுகளை நிவர்த்திசெய்து உரிமைகளைத் தந்தபின்பே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தினர்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 23. 1[illegible]. 1991இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது